செய்தி வெளியீடு எண்:691 நாள்:06.09.2021

செய்தி வெளியீடு

**தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடம், 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கம்பியில்லா இணைய வசதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (6.9.2021) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழகத்தின் பெருங்குடி வளாகத்தில், சீர்மிகு சட்டப் பள்ளிக்கு 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 3,641 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள மூன்று தளங்களுடன் கூடிய 18 பொலிவுறு நவீன வகுப்பறைகளைக் (Smart Class Rooms) கொண்ட கூடுதல் இளங்கலை வகுப்பிற்கான கட்டடத்தை திறந்து வைத்தார்.

மேலும், சட்டப் படிப்பு பயிலும் மாணவர்கள் சர்வதேச அளவிலான அன்றாட சட்டத் தீர்வுகளையும், சட்ட நுணுக்கங்களையும் உடனுக்குடன் அறிந்து தெரிந்து கொள்ளும் வகையில், 55 வகுப்பறைகளைக் கொண்ட இளங்கலை மற்றும் முதுகலை வகுப்புக் கட்டடத்தில் 5 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கம்பியில்லா இணைய வசதி சேவையினை (Wi-fi) மாணவ, மாணவியர்களின் பயன்பாட்டிற்காக தொடங்கி வைத்தார்.

அரசு சட்டக் கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட **11** நபர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 நபர்களுக்கு பணிநியமன ஆணைகளையும் வழங்கினார்**.**

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ். ரகுபதி, சட்டமன்ற உறுப்பினர் திரு. உதயநிதி ஸ்டாலின், சட்டத்துறைச் செயலாளர் திரு. கோபி ரவிக்குமார், சட்டக்கல்வி இயக்குநர் பேராசிரியர் முனைவர் ச. சொக்கலிங்கம், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் முனைவர் நா.சு. சந்தோஷ் குமார், பதிவாளர் முனைவர் ரஞ்சித் ஒமன் ஆபிரஹாம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

•••••••••

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9